

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முகாம் இல்லத்தில் தலைமை நிலையச் செயலாளர், துறைமுகம் காஜா தமது பிறந்த நாளை யொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் கழக மீனவர் அணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் சந்தித்து மீனவர் பிரச்சினை குறித்து கோரிக்கை மனு அளித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், அமீரக தி.மு.க. அமைப்பாளர் துபாய் மீரான் இந்திய அரசின் துணைத் தூதரக விருது பெற்றமைக்காக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, திமுக விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் நடைபெற்ற தலைவர்72 – கழக அணிகளுக்கிடையேயான மாபெரும் கிரிக்கெட் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதல் இடத்தைப் பிடித்த கழக விளையாட்டு மேம்பாட்டு அணி, இரெண்டவது இடத்தைப் பிடித்த தகவல் தொழில் நுட்ப அணி, மூன்றாவது இடத்தைப் பிடித்த இளைஞர் அணி மற்றும் பெண்கள் பிரிவில் முதல் இடத்தைப் பிடித்த தகவல் தொழில் நுட்ப அணி, இரெண்டவது இடத்தைப் பிடித்த மகளிர் அணி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி அவர்களுடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் கழக தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளரும் தொழில்துறை அமைச்சருமான முனைவர் TRB ராஜா, கழக மகளிர் அணி துணைச் செயலாளரும் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத் தலைவருமான திருமதி.குமரி விஜயகுமார், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநிலத் துணைச் செயலாளர்கள் எஸ்.ஆர்.பார்த்திபன், தனுஷ் எம்.குமார், ஆர்.கோபால்ராம், எஸ்.கார்த்திக், மு.வாசிம்ராஜா, சுரேஷ் ஜே.மனோகரன், செல்வி.நிவேதா ஜேசிகா, வே.கௌதமன், நா.ஆனந்த், பி.கே.பாபு, முகமது இஷ்ரத் ஆகியோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி நடத்திய தலைவர் 72 கிரிக்கெட் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலிடத்துக்கான கோப்பையை வென்ற விளையாட்டு மேம்பாட்டு அணி, இரண்டாம் இடம் பிடித்த தகவல் தொழில்நுட்ப அணி, அதே போல மகளிர் பிரிவில் முதல் இடம் பிடித்த தகவல் தொழில்நுட்ப அணியைச் சேர்ந்த சகோதரிகள் மற்றும் 2ஆம் இடத்தை பிடித்த மகளிரணியினரை நேரில் வாழ்த்தினார். உடன் விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா மற்றும் பலர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பர் – முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் தாத்தாவின் மகள் வழி கொள்ளுப்பேத்தியும், டி.எஸ்.அண்ணாதுரை – சரஸ்வதி இணையரின் மகளுமான மருத்துவர் எஸ்.ஏ.வித்யாலெட்சுமி – காவல்துறை துணை கண்காணிப்பாளர் சகோதரர் டி.விக்னேஷ் இணையரின் திருமணத்தை திருச்சியில் நேற்று நடத்தி வைத்தார். மணமக்கள் இருவரும் வாழ்வில் எல்லா வளமும் பெற்று தமிழ் போல் வாழ்கவென வாழ்த்தினார். இதில் அமைச்சர்கள் கே.என். நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி சிவா எம்.பி., கழகத்தினர் மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வடசென்னைப் பகுதியில்

# 712 குடியிருப்புதாரர்களுக்கு வீடுகள் ஒதுக்கீட்டு ஆணை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, பிப். 20 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.2.2025) சென்னை, டிக்காஸ்டர் சாலையில் அமைந்துள்ள டான்போஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சந்திரயோகி சமாதி, ராதா கிருஷ்ணபுரம் மற்றும் சத்தியவாணி முத்துநகர் ஆகிய திட்டப் பகுதிகளில் 712 குடியிருப்புதாரர்களுக்கு குடியிருப்புக் கான ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீட்டு வசதியினை ஏற்படுத்தி தரும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது. நகர்ப்புற ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வீட்டுவசதி வாய்ப்புகள் மட்டுமே போதுமானதாக இருக்காது. அவர்களுக்கு குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொது வெளியிடம் போன்ற போதுமான நகர்ப்புற வசதிகளுடன் வீட்டுவசதி ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார். குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வா தாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு தமிழ்நாடு அரசால் பல்வேறு திட்டங்கள் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்று முதல், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 5059.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 23 மாவட்டங்களில் 131 இடங்களில் 44,609 அடுக்குமாடி குடியிருப்புகள் திறந்து வைக்கப்பட்டு, 55,898 பயனாளிகளுக்கு குடியிருப்பு களுக்கான ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அடுக்குமாடி குடியிருப்புகள் மறு கட்டுமானம் செய்யும் சமயத்தில் அங்குள்ள குடும்பங்கள் சில மாதங்களுக்கு வேறு இடங்களில் தங்குவதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசின் மூலம் வழங்கப்பட்டு வந்த ஒரு குடும்பத்திற்கான மறுகுடியமர்வு கருணைத் தொகை ரூ.8000/த்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ.24,000 என்று உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 10,081 குடும்பங்களுக்கு கருணைத் தொகையாக 23.96 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், "நம் குடியிருப்பு நம் பொறுப்பு" என்ற புதிய திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார். இத்திட்டத்தின் மூலம் குடியி ருப்போர் நலச்சங்கங்கள் உருவாக்கப்பட்டு அடுக்குமாடி கட்டிடங்களில் வழக்கமான பராமரிப்பு மற்றும் சிறிய பழுதுப்பார்புகளை மேற்கொள்ள பராமரிப்பு கட்டணத்திற்கு இணையான மானியத்தை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. இதுவரை 694 சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு இதில் 558 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு இணை மானியமாக 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மறுகட்டுமான திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சந்திரயோகி சமாதி திட்டப்பகுதியில் 240 அடுக்குமாடி குடியிருப்புகளையும், சத்தியவாணி முத்து நகர் திட்டப்பகுதியில் 438 அடுக்குமாடி குடியிருப்புகளையும், எழும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ராதா கிருஷ்ணபுரம் திட்டப்பகுதியில் 168 அடுக்குமாடி குடியிருப்புகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 29.10.2024 அன்று திறந்து வைத்தார். இதில் மறுகட்டுமான பயனாளிகளான சந்திரயோகி சமாதி திட்டப் பகுதியில் 160 குடியிருப்புதாரர்க ளுக்கும், சத்தியவாணி முத்துநகர் திட்டப் பகுதியில் 384 குடியிருப்புதாரர்க ளுக்கும் மற்றும் ராதாகிருஷ்ணபுரம் திட்டப்பகுதியில் 168 குடியிருப்புதாரர்க ளுக்கும், என மொத்தம் 712 மறுகட்டுமான குடியிருப்புதாரர்களுக்கு ஒதுக்கீடு ஆணைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

ஏழை எளிய மக்களின் பொருளாதார நிலையினை கருத்தில் கொண்டு, சந்திரயோகி சமாதி திட்டப்பகுதி மறுகட்டுமான பயனாளி பங்களிப்பு தொகையான 83 ஆயிரம் ரூபாயினை, 20 வருட மாதத் தவனையில் எளிய முறையில் பங்களிப்பு தொகை செலுத்த ரூ.500 என்று நிர்ணயம் செய்தும், ராதா கிருஷ்ணபுரம் மற்றும் சத்தியவாணி முத்துநகர் ஆகிய திட்டப்பகுதி களின் மறுகட்டுமான பயனாளி பங்களிப்பு தொகையான 1.50 லட்சம் ரூபாயினை 20 வருட மாதத் தவணையில் எளிய முறையில் பங்களிப்பு தொகை செலுத்த ரூ.625 என்று நிர்ணயம் செய்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி,

இ.பரந்தாமன், அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுரு பரன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.பிரபாகர், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருச்சி மாவட்டத்திற்கு பல்வேறு திருமண நிகழ்ச்சிகள் மற்றும் அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள நேற்று வருகை தந்த போது திருச்சி காட்டூர் பகுதியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழ் ஓங்கட்டும். உடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி சிவா எம்.பி., மற்றும் பலர் உள்ளனர்.

## 180 கி.மீ. வேகத்தில் காற்று அடித்தாலும் தாங்கக் கூடிய வகையில்

# கண்ணாடி இழை பாலம் உறுதித்தன்மையுடன் அமைக்கப்பட்டுள்ளது!

## ஆய்வு செய்த அமைச்சர் எ.வ. வேலு பேட்டி!



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு செயலாளர் டாக்டர்.செல்வராஜ், , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, ஆகியோர் முன்னிலையில் 18.02.2025 அன்று கன்னியாகுமரி கண்ணாடி இழை தரைத்தள பாலத்தினை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், உட்பட பலர் உள்ளார்கள்.

*கன்னியாகுமரி,பிப்.20-*

*கன்னியாகுமரி மாவட்ட நெடுஞ்சாலைத்துறை சார்பில் கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை முதல் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை சுற்றுலா பயணிகள் நடந்து செல்வதற்கு ஏதுவாக திருவள்ளுவர் சிலை முதல் விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி இழை தரைத்தள பாலத்தினை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, தலைமையில் நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு செயலாளர் டாக்டர்.செல்வராஜ், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் ஆகியோர் முன்னிலையில் (18.02.2025) அன்று நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு செய்தியாளர்களிடம் பேசுகையில்:-*

*முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அய்யன் திருவள்ளுவர் சிலையை கடந்த 2000 ஆண்டு திறந்து வைத்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் விவேகானந்தர் பாறை முதல் அய்யன் திருவள்ளுவர் சிலையினை இணைத்து சுற்றுலாப் பயணிகள் அய்யன் திருவள்ளுவரை கண்டு களித்திட ரூ.37 கோடி மதிப்பில் கண்ணாடி இழை தரைத்தளம் பாலம் அமைத்து கடந்த 30.12.2024 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் சிலை நிறுவி 25ம் ஆண்டு வெள்ளி விழா நிகழ்ச்சியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.*

*கடல்சார் நடைபாதை பாலத்தின் நீளம் 77 மீட்டர் மற்றும் அகலம் 10மீட்டர் ஆகும். மேலும் கடல் அரிப்பு கடல் காற்றின் வேகம் போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு கொண்டு தான் பாலம் வடிவமைக்கப்பட்டுள்ளது. சுனாமி காலத்தில் அலைகளின் உயரம் கணக்கீட்டு தான் பாலம் கட்டப்பட்டுள்ளது. உறுதித்தன்மையினை பொறுத்த வரை 180 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று அடித்தாலும் தாங்க கூடியவகையில் தான் பாலம் கட்டப்பட்டுள்ளது. கண்ணாடி இழை தரைத்தள பாலத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைத்ததைத்தொடர்ந்து கன்னியாகுமரிக்கு வெளிநாடுகள் மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும், பிற மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப்பயணிகள் வருகை தந்து அய்யன் திருவள்ளுவர் சிலையினை கொண்டு தான் கண்டுகளிப்பதோடு, கண்ணாடி இழை தரைத்தளபாலம் வாயிலாக நடந்து சென்று கடலின் அழகினை கண்டு மகிழ்ச்சி அடைகிறார்கள்.*

*மேலும் அய்யன் திருவள்ளுவர் சிலையினை காண வரும் சுற்றுலாப்பயணிகளின் பாதுகாப்பிற்காகவும் அவர்களுக்கு வழிகாட்டிட காவல்துறை, வருவாய்த்துறை, நெடுஞ்சாலை துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை சார்பாக பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். குறிப்பாக தமிழ்நாட்டிற்குட்பட்ட பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள் நாள்தோறும் அதிக அளவில் கண்ணாடி இழை பாலத்தினை வந்து பார்வையிடுகிறார்கள். ஜனவரி மாதத்தினை பொறுத்த வரை மட்டும் 2 இலட்சத்தில் பதினாயிரம் சுற்றுலா பயணிகளும், பிப்பரவரி 1 முதல் பிப்பரவரி 17ம் தேதி வரை மட்டும் 1 இலட்சத்தி இருபத்தி நாலாயிரம் சுற்றுலா பயணிகள் என மொத்தம் 3.50 இலட்சம் சுற்றுலா பயணிகள் இதுவரை பார்வையிட்டுள்ளார்கள்.*

*இன்றைய ஆய்வின் நோக்கம் கண்ணாடி பாலத்தில் சிறு சிறு பணிகளை பார்வையிட்டு, மீண்டும் பாலத்தின் உறுதித் தன்மையினை ஆராய சென்னை ஐஐடி-யை சார்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் செயலாளர் தலைமையில் வருகை புரிந்துள்ளார்கள். குறிப்பாக கண்ணாடி இழைப் பாலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அலங்கார மின்விளக்குகள் அமைக்கும் பணி, திருவள்ளுவர் சிலையினை மேம்படுத்தும் பணிகள் உள்ளிட்டவைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணிகளும் நடைபெற்று வருகிறது. 2025ம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் புதிய அத்தியாயத்தினை படைத்துள்ளது.*

*இவ்வாறு பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் பேசினார்கள்.*

*நடைபெற்ற ஆய்வில் சிறப்பு அலுவலர் திட்டம் சந்திர சேகர், தலைமை பொறியாளர் கட்டுமானம் மற்றும் பாரமரிப்பு சந்திய பிராகாஷ், கண்காணிப்பு செயற்பொறியாளர் (திருநெல்வேலி) திருமதி.சராதா, நெடுஞ்சாலைத் துறை கோட்ட செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டின், கன்னியாகுமரி பேரூராட்சி தலைவர் குமரி ஸ்டீபன், துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.*